முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கல்லுளிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.03.2019, செவ்வாய்க்கிழமை

1. **தரும சக்தியே ஞானதேசிகா**
**தரணி காத்திடும் ஆறுமுக அரங்கா**
**கரும வினைகள் வென்று உலகை**
**காத்தருள வந்த குருராசா**
2. அரசனே உன் பெருமை அறிந்திட
அகிலமே காப்பு பெறுமெனக் கூறி
தரணியில் **விளம்பி சால் திங்கள்**
**தக்க மூவேழு திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 21ம் நாள் 05.03.2019, செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் நித்ய பிரசன்ன ஆசி
வழங்குவேன் கல்லுளிச்சித்தர் யானும்
பாரதமே வணங்கி தேறவல்ல
பண்புமிக்க சத்தியநெறி கொண்ட
4. கொண்டநல் அரங்கன் தலைமை
குறையில்லா தருமம் ஏற்று
தொண்டென தொண்டர்களென
தேசமெங்கும் அணிவகுத்து வந்திட
5. வந்திட கலி இடர்கள் ஒடும்
வறுமை கட்டம் எனும் துன்பம்
முந்தை வினைகளும் மேவியே
மொழிகுவேன் உலக மக்களெல்லாம்
6. மக்களெல்லாம் ஞானபலமுடன்
மரணம் வெல்லும் சக்தி கூடி
ஆக்கம் பெறுவர் அழிவில்லா
அரங்கன் மூலம் வானவர்கள்
7. வானவர்கள் கலியுகத்தார்களை
வழிநடத்தி ஞானிகள் ஆக்க
ஞானசபை நடத்தி வருக
நல்கி அரங்கன் ஆசி பெற்றவர்
8. ஆசி பெற்றவர் அருள் தீட்சை பெற்றவரென
அனைவரும் தடைகள் இன்றி
பேசிட கலியுகம் தன்னில்
பெரும் பேறடைவர் என்பேன்
9. என்கவே இனியும் தாமதிக்கா
ஏழாம் படை வீட்டை அணுகி

நன்மை தரும் தருமத்தில் உதவி
ஞானதேசிகன் அருளமுது உண்டு

10. உண்டான உயர் தீட்சை பெற்று
உலகியல் துன்பநிலை விட்டு
கொண்டதொரு அரங்கன் திருவடி
குருவடியென சரணடைவு காண

11. காணவே ஞானபலம் கூடி
கலிகால இடர்நிலை மாறும்
ஞான ஆட்சி ஞானயுகமாக மாறும்
நாட்டிவந்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கல்லுளிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லாது தர்மங்களைச் செய்து அளவிலா தர்மசக்தியை உலகினில் உருவாக்கிய தர்மசக்தியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே தர்மத்தினால் உலகினை காத்திடும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே மக்களின் கர்மவினைகளை வென்று உலகை காத்து ரட்சித்து அருள் செய்திடவே இவ்வுலகை வழிநடத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஞானகுருவே குருராசனே அரங்கமகாதேசிகனே உமது பெருமைகளையும் உம்மையும் இவ்வுலகம் அறிந்திட்டால் உம்மால் இவ்வுலகம் காக்கப்படும் என அற்புதமான அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 21ம் நாள் 05.03.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கல்லுளிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கல்லுளிச்சித்தர்.

பணிந்து வணங்கிட தேசமே தேறிடும், வல்லமைமிக்க மகா ஞானி பண்பும் தயவும் சத்தியநெறியும் கொண்ட அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை ஏற்றுக் கொண்டு ஆறுமுக அரங்கன் ஆற்றும் தானதருமப் பணிகளை தமது பணிகளாக ஏற்று தருமம் செய்திட உதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் அரங்கனின் தொண்டர்களாகி நாடெங்கிலும் உள்ள மக்களெல்லாம் தொண்டர்களாக ஆகி ஒன்றிணைந்து அணிவகுத்து ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து அரங்கனின் தலைமையில் செயல்பட்டு வர, இந்த உலகத்தை பற்றியுள்ள கலியுகத்தின் துன்பங்கள் எல்லாம் நாட்டை விட்டே விலகி ஓடிடுமப்பா, வறுமை எனும் ஏழ்மை நிலையும் விலகிடும், மக்கள் செய்திட்ட முன்வினை பாவங்களினால் வருகின்ற துன்பங்களும் விலகிடும். மக்கள் தெளிவான சிந்தனையை பெற்று ஞானபலம் பெற்று மரணத்தை வெல்லுகின்ற சக்தியும் பெருகி ஆக்கமும் ஊக்கமும் அடைந்து சிறப்படைவார்கள்.

என்றும் அழிவிலாத வானவர்களாகிய ஞானிகளும் தேவர்களும் கலியுக மக்களை ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக வழிநடத்தி அவர்களை ஞானிகளாக ஆக்கிடவே துறையூர் ஓங்காரக்குடில் என்கின்ற ஞானசபைதனை நடத்தி வருகின்றார்கள்.

ஆதலினால் எவரொருவர் பயபக்தி விசுவாசத்துடன் பணிந்து அரங்கன் திருவடியே கதியென்று நம்பிக்கையுடன் ஞானநெறி புகுந்து அரங்கனின் ஆசிகளை பெறுகின்றார்களோ, அவர்களெல்லாம் அரங்கனிடத்து தீட்சை உபதேசங்களை பெற்றார்களோ, அவர்களெல்லாம் அவரவர்க்கு உண்டான தடைகள் எல்லாம் விலகி நன்மைகளை பெற்று கலியுகத்தினில் பெறுதற்கரிய பெரும்பேற்றினை அடைந்து சிறப்படைவார்கள்.

ஆதலினாலே உலக மக்களே இனியும் தாமதிக்காமல் உங்களை கடைத்தேற்றும் வல்லமைமிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி ஆங்கே புண்ணியங்களையும், சகல நன்மைகளையும் தந்தருளுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்மங்களிலே தாராளமாய் பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் வருவதுடன் ஆங்கே முதுபெரும் ஞானிகளை பூஜித்து வழங்கப்படுகின்ற அருளமுதமாகிய குடில் உணவினை உண்டு அரங்கனிடத்து உயர்ஞான தீட்சைகளை பெற்று அவதார மகா ஞானி கலியுகத்தின் காவல் தெய்வம் யுகமாற்ற ஞானத்தலைவன் ஞானகுருநாதர் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளே குருவடியென இறுகப்பற்றிக் கொண்டு ‘‘அரங்கமகா தேசிகரே நீரே எமது குலகுரு, நீரே எமது குலதெய்வம், நீரே நான் போற்றும் சாமியும் தெய்வமும் எல்லாமும், என் உள்ளம், உடல், பொருள், ஆவி அனைத்தும் உமது திருவடிக்கே அர்ப்பணிக்கிறேன். பாவியேன் அர்ப்பணிப்பையும் ஒரு பொருட்டாய் மதித்து எம்மை உமது திருவடிக்கே அடிமையாய் ஏற்று அருள்புரிய உமது திருவடி பணிந்து வேண்டுகிறேன். சர்வ ஞானபலம்மிக்க அரங்கமகா தேசிகரே தாம் பெற்ற பேரின்ப நிலையை அடியேனும் பெற்றிட அருள்புரிய வேண்டுகிறேன். உம்மை விட்டால் எமக்கு வேறு கதியில்லை, வேறு மார்க்கம் இல்லை. எத்தனை துன்பம் வந்தபோதும் உமைவிட்டு பிரியாது, உமது நிழலைவிட்டு அகலாது உம்மை பின்தொடர்ந்து வர, எமக்கு அருள்புரியுங்கள், எம்மை கைவிட்டுவிடாதீர்கள், எம்மை ஏற்றுக் கொள்ளுங்கள்’’ என்றே பலவாறாய் மன்றாடி மனம் உருகி வேண்டி அரங்கன் திருவடியே கதியென சரணடைவை முழுச்சரணாகதியாக அடைந்திட வேண்டும்.

உலகோரும், அன்பரும், தொண்டரும், சீடரும் என அனைவரும் அரங்கன் திருவடிகளிலே சரணடைவு அடைந்திட அடைந்திட அவரவருள்ளும் தயவு பெருகி அறிவு சிறப்பறிவு ஆகி ஞானபலம் கூடி கலிகாலத்தின் துன்பநிலைகள் எல்லாம் அரங்கன் அருளால் மாறி உலகினில் அன்பர்களின் வேண்டுகோளிற்கு இணங்கி உலகமெலாம் ஞானிகள் இறங்கி துணைபுரிய ஞானத்தலைவன் முருகப்பெருமானும் பெருந்தாய், பெருங்கருணையுடன் வெளிப்பட்டு கலியுகத்தின் ஆட்சிகளை மாற்றி ஞானம்மிக்க ஞானஆட்சியினை உருவாக்கி இந்த கலியுகத்தை ஞானயுகமாக மாற்றித் தருவார் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கல்லுளிச்சித்தர்.

–சுபம்–